**செய்தி வெளியீடு எண்: 88** **நாள்: 04.02.2013**

## <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (4.2.2013) தலைமைச் செயலகத்தில், சார்ட்டர்ட் அக்கவுண்டன்ட் தேர்வில் அகில இந்திய அளவில் முதல் இடத்தை பெற்று சாதனைப் படைத்த மும்பையில் வாழும் தமிழ்ப் பெண் செல்வி பிரேமாவிற்கு 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையினை ஊக்கத் தொகையாக வழங்கி, வாழ்த்தினார்கள்.

விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் பெரிய கொல்லியூர் கிராமத்தைச் சேர்ந்தவரும் மும்பையில் கடந்த 20 ஆண்டுகளாக ஆட்டோ ஓட்டுநர் தொழில் புரிந்து வருபவருமான திரு. ஜெயக்குமார் என்பவரின் மகள் செல்வி பிரேமா என்பவர் அண்மையில் நடைபெற்ற சார்ட்டர்ட் அக்கவுண்டன்ட் தேர்வில் அகில இந்திய அளவில் முதல் இடத்தை பெற்றார். மிகவும் கடினமான இந்த தேர்வில் முதலிடத்தைப் பெற்று தமிழ்ச் சமுதாயத்திற்கு பெருமை தேடித் தந்த செல்வி பிரேமாவை பாராட்டும் வகையில் தமிழக அரசின் சார்பில் 10 லட்சம் ரூபாய் ஊக்கத் தொகை வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 24.1.2013 அன்று அறிவித்தார்கள்.

அதன்படி, செல்வி பிரேமாவிற்கு அவரின் சாதனையைப் பாராட்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையினை ஊக்கத் தொகையாக வழங்கி, மேலும் பல சாதனைகளை புரிந்து, வாழ்வில் வளம் பெற வேண்டுமென்று வாழ்த்தினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து ஊக்கத் தொகையினை பெற்றுக் கொண்ட செல்வி பிரேமா, தன்னை ஊக்குவிக்கும் வகையில், பாராட்டி நிதியளித்து வாழ்த்தியமைக்காக தனது நெஞ்சார்ந்த நன்றிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொண்டார்.

இந்த நிகழ்வின்போது, செல்வி பிரேமாவின் தந்தை திரு. ஜெயக்குமார் மற்றும் அவரது சகோதரர் உடனிருந்தார்.

* * * * * * *

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள் : 4.2.2013